Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 2.11.2024/Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 2.11.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இந்தியா-மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றங்கள் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி, கிரீஸ் பிரதமருடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் 6 நாள் பயணமாக நாளை ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் செல்ல உள்ளார்.

2 நாள் பயணமாக இன்று ராஞ்சி சென்றுள்ள மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா அம்மாநில பாஜக தலைவர்களுடன் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து மதிப்பாய்வு செய்ய உள்ளார்.

புதுச்சேரியில் சஷ்டி சூரசம்ஹார விழா இன்று பல்வேறு முருகன் கோவில்களில் கொடியேற்றத்துடன் தொடங்கியது.

மோடி (14)

இந்தியா-மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றங்கள் உட்பட பல்வேறு பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சனைகள் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி, கிரீஸ் பிரதமருடன் பேச்சு வார்த்தை நடத்தினார். க்ரீஸ் பிரதமர் திரு கிரியா கோஸ் மிட்சோ டாகிசுடன் தொலைபேசியில் உரையாடிய திரு நரேந்திர மோடி, இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கான தங்கள் உறுதிபாட்டை மீண்டும் வலியுறுத்தி உள்ளார். மேலும், இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகம், பாதுகாப்பு, கப்பல் போக்குவரத்து மற்றும் கூட்டாண்மை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் முன்னேற்றம்

குறித்து அவர்கள் மதிப்பாய்வு செய்தனர். அவர்களின் உரையாடலின் போது, 3 ஆவது முறையாக பிரதமராக திரு நரேந்திர மோடி தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு திரு மிட்சோ டாகிஸ் வாழ்த்து தெரிவித்தார். இரு நாடுகளின் உயர் மட்ட பரிமாற்றங்கள் மூலம், இரு தரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள உறுதியை இரு நாட்டு தலைவர்களும் பாராட்டினர்.

*வாழ்த்து* (6)

குஜராத்தி புத்தாண்டை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்த புத்தாண்டு குஜராத் மக்கள் வாழ்வில் மகிழ்ச்சியையும், வெற்றியையும், செழிப்பையும் கொண்டு வர வேண்டும் என்று அவர் தமது சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார். மேலும், அனைத்து மக்களின் கனவுகளும் நனவாகும் என்றும், ஒவ்வொரு நாளும் புதிய ஆற்றலும், நேர்மறையும் நிறைந்திருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

*ஜெய்சங்கர்* (18)

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் 6 நாள் பயணமாக நாளை ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்கு செல்ல உள்ளார். ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் இந்தியாவின் 4 ஆவது துணை தூதரகத்தை திறந்து வைக்கும் அவர், கான்பெர்ரா வில் நடைபெறும் 15 ஆவது வெளியுறவு அமைச்சர்களின் கட்டமைப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்க உள்ளார். பின்பு ஆஸ்திரேலியா நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற உள்ள 2 ஆவது ரெய்சினா மாநாட்டின் தொடக்க விழா வில் டாக்டர் ஜெய்சங்கர் உரையாற்றுகிறார். பின்னர் ஆஸ்திரேலியா தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வர்த்தக சமூகத்தினர், ஊடகங்கள் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்தவர்களுடன் அவர் கலந்துரையாட உள்ளார். இப்பயணத்தின் 2 ஆம் கட்டமாக டாக்டர் ஜெய்சங்கர் வரும் 8 ஆம் தேதி சிங்கப்பூருக்கு பயணம் மேற்கொள்கிறார். அங்கு ஆசியான்-இந்தியா கூட்டமைப்பின் 8 ஆவது வட்ட மேஜை மாநாட்டில் உரையாற்றுவார். இரு நாடுகளுக்கு இடையேயான நெருங்கிய கூட்டாண்மையை மறு ஆய்வு செய்யவும், இரு தரப்பு உறவுகளை

மேம்படுத்துவதற்கான வழிகளை ஆராயவும் அவர் சிங்கப்பூர் தலைவர்களை சந்திக்க உள்ளார்.

*வெளியுறவுத்துறை அமைச்சர் சந்திப்பு* (15)

தாய்லாந்து நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் திரு மாரீஸ் சங்கியம் பொங்சா 4 நாள் பயணமாக நேற்று முன் தினம் இந்தியா வந்தடைந்தார். புதுடெல்லியில் இன்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்த திரு மாரீஸ், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால வரலாற்று மற்றும் கலாச்சார உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக, தமது சமூக ஊடகப் பதிவில் டாக்டர் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார். இந்தியா-தாய்லாந்து உறவுகள், பலதரப்பு ஒத்துழைப்பு மற்றும் பிராந்திய வளர்ச்சிகள் குறித்து அவர்கள் விவாதித்தனர். புதுடெல்லியில் நேற்று நடைபெற்ற விவேகானந்தா சர்வதேச அறக்கட்டளை உறுப்பினர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்ட திரு மாரீஸ் சங்கியம் பொங்சா, **தர்மத்தின் ஆசிய நூற்றாண்டை** நோக்கி என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். மேலும், அமைதி மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்காக புத்தரின் போதனைகளை உலகம் முழுவதும் பரப்புவதில் இந்தியாவும் தாய்லாந்தும் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் கூறினார்.

*அமித்ஷா* (13)

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா 2 நாள் பயணமாக இன்று ராஞ்சி சென்றுள்ளார். அம்மாநில பாஜக தலைவர்களுடன் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து மதிப்பாய்வு செய்ய உள்ளார். மேலும், நாளை அவர் காட்ஷிலாவில் உள்ள தல்பூம்கர், ஹசாரிபாக்கில் உள்ள பர்கதா மற்றும் சத்ரா வில் உள்ள சிமாரியா ஆகிய 3 இடங்களில் தேர்தல் பேரணிகளில் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளார். ஜார்கண்ட் மாநில பாஜக தேர்தல் இணை பொறுப்பாளரும், அசாம் முதலமைச்சருமான திரு ஹிமந்தா பிஸ்வா சர்மா, பாஜக ஆட்சிக்கு வந்தால் மாநிலத்தில் தேசிய குடிமக்கள் பதிவேட்டை அமல்படுத்துவதாக கூறினார். மேலும், காங்கிரஸ் பொது செயலாளர் திரு கே சி வேணுகோபால், பாஜகவின் செயல்பாடுகள் அரசியல் சாசனத்திற்கு எதிரானது என குற்றம் சாட்டினார். ஜார்கண்ட் மாநிலத்தில்

சட்டமன்ற தேர்தல் நவம்பர் 13 ஆம் தேதியும், 20 ஆம் தேதி என 2 கட்டங்களாக நடைபெற உள்ளது. நவம்பர் 23 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.

*காஷ்மீர்* (10)

தெற்கு காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டத்தின் ஹல்கன் கலி பகுதியில் இன்று பிற்பகல் பாதுகாப்பு படையினருடன் நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் 2 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். காவல் துறையினருக்கு வந்த தகவலை தொடர்ந்து, ஹல்கன் கலி பகுதியில் பாதுகாப்பு படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். அதனை தொடர்ந்து ஏற்பட்ட துப்பாக்கி சூட்டில் இவர்கள் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. இவர்களை அடையாளம் கானும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கிடையே, ஸ்ரீநகரில் கன்யார் பகுதியில் பாதுகாப்பு படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையில், துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

*ரயில்வே* (8)

சாத் பண்டியையை முன்னிட்டு பயணிகளின் வசதிக்காக சிறப்பு ரயில்களை இயக்கி வருவதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஆனந்த் விஹார், புதுடெல்லி மற்றும் நிசாமுதின் ரயில் நிலையங்களில் இருந்து சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன. பண்டிகை காலங்களில் புதுடெல்லியின் முக்கிய ரயில் நிலையங்களில் இருந்து வடக்கு ரயில்வேயால் 3 ஆயிரத்து 200 க்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக வடக்கு ரயில்வேயின் தலைமை மக்கள் தொடர்பு அதிகாரி திரு ஹிமான்ஷு சேகர் உபத்யாய் தெரிவித்துள்ளார்.

*சஷ்டி* (8)

புதுச்சேரியில் சஷ்டி சூரசம்ஹார விழா இன்று பல்வேறு முருகர் கோவில்களில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. புதுச்சேரி முத்தியால்பேட்டை சுந்தர விநாயகர் சுப்பிரமணிய சுவாமி சித்தி விநாயகர் கோவில், பெத்து செட்டிப் பேட்டை சித்தி விநாயகர் சிவ சுப்பிரமணியர் சுவாமி கோவில், கவுசிக பாலசுப்பிரமணியர் கோவில் உள்ளிட்ட பல்வேறு கோவில்களில் பெருந்திரளான மக்கள் சாமி தரிசனம் செய்தனர். முக்கிய

நிகழ்வான சூரசம்ஹாரம் வரும் 7 ம் தேதி நடைபெற உள்ளது. மறுநாள் 8 ஆம் தேதி திருக்கல்யாணம் நடைபெற உள்ளது.

*பிஆர்டிசி (13)*

திருச்செந்தூரில் நடைபெறும் சூரசம்ஹார விழாவை முன்னிட்டு புதுச்சேரி மற்றும் காரைக்காலில் இருந்து சிறப்பு பேருந்து இயக்கப்படுவதாக பிஆர்டிசி தெரிவித்துள்ளது. அதன்படி, புதுச்சேரியில் இருந்து திருச்செந்தூருக்கு 6 ம் தேதி மாலை 7 மணிக்கு பேருந்து புறப்படுகிறது. மறுநாள் 7 ஆம் தேதி இரவு 9.30 மணிக்கு திருச்செந்தூரில் இருந்து புதுச்சேரிக்கு பேருந்து புறப்படுகிறது. இதற்கான பயண கட்டணம் முன்பதிவு உட்பட 700 ரூபாய் என்றும், பேருந்து நிலையங்களில் உள்ள பிஆர்டிசி பயண சீட்டு முன்பதிவு மையம் மற்றும் பஸ் இந்தியா ஆப் மூலம் முன்பதிவு செய்து கொள்ளலாம் என்றும் பிஆர்டிசி மேலான் இயக்குநர் தெரிவித்துள்ளார். இதேபோல் காரைக்கால்-திருச்செந்தூர் பேருந்து 6 ஆம் தேதி இரவு 9 மணிக்கு காரைக்காலில் இருந்து புறப்படும். இதே பேருந்து திருச்செந்தூரில் இருந்து காரைக்காலுக்கு 7 ஆம் தேதி இரவு 9.30 மணிக்கு புறப்படும் என்றும் பிஆர்டிசி அறிவித்துள்ளது.

*கல்லறை திருநாள் (9)*

உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்துவர்களால் கல்லறை திருநாள் இன்று கடைபிடிக்கப்பட்டது. புதுச்சேரி உப்பளத்தில் உள்ள கல்லறை தோட்டத்தில் மறைந்த முன்னோர்களின் கல்லறைகளில் மெழுகுவர்த்தி ஏற்றியும், மலர்களை வைத்தும் கிறிஸ்துவர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். கல்லறை திருநாளுக்காக பெங்களுருவில் இருந்து பல வண்ண மலர்கள் விற்பனைக்காக வந்துள்ளன. இதேபோல் நாகை மாவட்டம் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலயம், தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி, திருச்சி, திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இந்நாளை ஒட்டி தேவாலயங்களில் சிறப்பு திருப்பலிகள் நடைபெற்றன.

*குப்பை (9)*

புதுச்சேரி நகர பகுதி மற்றும் கிராமப்பகுதிகளில் நேற்று முன்தினம் தீபாவளி பண்டிகை கொண்டாட்டங்களின் போது வெடிக்கப்பட்ட பட்டாசுகளின் கழிவுகள் அதிக அளவில் சாலைகளில் காணப்பட்டன. அந்த

குப்பைகள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு குப்பை கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டன. அதன்படி, நேற்று ஒரு நாள் மட்டும் 450 டன் குப்பையும், கிராமப் பகுதிகளில் 200 டன் குப்பையும் என மொத்தம் 650 டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு குருமாம்பேட் குப்பை கிடங்கிற்கு எடுத்து செல்லப்பட்டன. தீபாவளி பண்டிகையை ஒட்டி ஒரே நாளில் 100 டன் குப்பைகள் அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

விளையாட்டு (13)

அமெரிக்க கொலராடோவில் நடைபெறும் உலக குத்து சண்டை ஆடவர் – இளையோர் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் க்ரிஷா வர்மா தங்கப் பதக்கம் வென்றார். 75 கிலோ எடை பிரிவில் ராகுல் குண்டு வெள்ளி பதக்கம் வென்றார். மகளிர் 48, 57, 60, 70 கிலோ எடை பிரிவுகளில் இந்தியா 4 வெண்கல பதக்கங்களை வென்றுள்ளது. இன்று நடைபெறும் மகளிர் இறுதி போட்டியில் 51 கிலோ எடை பிரிவில், நிஷாவும், 54 கிலோ எடை பிரிவில் சுப்ரியா தேவியும், 65 கிலோ எடை பிரிவில் பார்தவி க்ரிவாலும் பங்கேற்க உள்ளனர். ஆடவர் 90 கிலோ எடை பிரிவில் இந்தியாவின் ஹேமந்த் சங்குவான், அமெரிக்காவின் ரிஷான் சிம்ஸ் ஆகியோர் களம் காண்கின்றனர்.

மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்று வரும் இந்தியா-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 ஆவது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின், 2 ஆம் நாளான இன்றைய ஆட்ட நேர இறுதியில், நியூசிலாந்து தனது 2 ஆவது இன்னிங்சில் 9 விக்கெட் இழப்பிற்கு, 171 ரன் எடுத்திருந்தது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்தியா-மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றங்கள் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி, கிரீஸ் பிரதமருடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் 6 நாள் பயணமாக நாளை ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்கு செல்ல உள்ளார்.

2 நாள் பயணமாக இன்று ராஞ்சி சென்றுள்ள மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா அம்மாநில பாஜக தலைவர்களுடன் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து மதிப்பாய்வு செய்ய உள்ளார்.

புதுச்சேரியில் சஷ்டி சூரசம்ஹார விழா இன்று பல்வேறு முருகன் கோவில்களில் கொடியேற்றத்துடன் தொடங்கியது.